**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>MCOP - 17/2023</u>**

**<u>நாள் – 16.04.2026</u>**

**<u>PW – 1</u>** புருஷோத்தமன்

**த/பெ.** பழனிஆண்டவர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2026.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு விபத்து சம்பந்தமாக நான்தான் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் Yamaha R 15 என்றால் சரிதான். அந்த வாகனம் மிக அதிகமான வேகம் செல்லக்கூடியது என்றால் சரிதான். விபத்து சமயம் நான் கல்லூரியில் முதலாமாண்டு என்ஜினியரிங் படிப்பு படித்து வந்தேன். அந்த சமயத்தில் நான் எந்த ஒரு வருமானமும் சம்பாதித்து வந்தது கிடையாது என்றால் சரிதான். எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு கோவை கங்கா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அவ்வாறு சிகிச்சை எடுத்துக்கொண்டதற்காக வேண்டி ரூ.6,39,685/–க்கு மருத்துவ பில்களை வழக்கிற்காக வேண்டி போலியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 10.04.2023–ம் தேதியிட்ட மருத்துவ பில்லில் ரூ.5,03,835/– என்ற மொத்த தொகையில் ரூ.1,50,000/– கம்பெனி சார்பாக செலுத்தப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. 26.08.2023–ம் தேதிக்கு பிறகு நான் தொடர் சிகிச்சை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் தொடர்

சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்பதற்கு அது சம்பந்தப்பட்ட மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது பொய் என்றும், நான் கடந்த 06.10.2023 ம் தேதி வரையில் தான் தொடர் சிகிச்சை எடுத்துள்ளேன் என்றும், அதற்கு பிறகு நான் தொடர் சிகிச்சை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு விபத்தானது என்னுடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும்தான் நடந்தது என்றும், அதனால் இந்த 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் எந்த ஒரு இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் தற்போது முழுமையாக குணமடைந்துவிட்டேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த மனு 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு **திருப்பூர் மருத்துவக் குழு வழங்கிய நிரந்தர ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்கிறேன்.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.04.16 18:40:57 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**